## நிறைவேற்றுச் சுருக்கம்

யுத்தம் நிறைவடைந்ததைத் தொடர்ந்து இலங்கையானது நிலையான பொருளாதார வளர்ச்சியை முன்னெடுத்து மேல் நிலை வருமான மட்டத்தை அடைந்துள்ளதுடன் இதன் பயனாக வெளிநாட்டு நேரடி முதலீடுகளை (குனுஐ) பாரிய அளவில் கவர்ந்து கொள்வதில் முன்னணியும் வகிக்கின்றமை முக்கிய விடயமாகும். இருந்த போதும், இலங்கையானது நிலையானதும் உறுதியானதுமான வெளிநாட்டு முதலீட்டுச் செயற்திட்டங்களை நாட்டிற்குப் பெற்றுக் கொள்வதற்கான இயலுமையினை அண்மைக் காலமாகப் பெற்றுள்ளதுடன் ஏனைய முன்னேற்றம் அடைந்து வரும் நாடுகளுடன் ஒப்பீடு செய்கின்ற போது இலங்கையின் தரவுகளானது அதன் முன்னேற்றதிலும் பார்க்க குறைவாகவே காணப்படுகின்றன.

*இலங்கையானது கடந்த சதாப்த்தின் போது வெளிநாட்டு நேரடி முதலீடாக வருடாந்தச் சராசரியாக 500 மில்லியன் ஐ.அ.டொ தொகையினை வருடாந்தம் கவர்ந்துள்ளது. (மொ.உ.உ சுமார் 1.5 சதவீதம்) அதே வேளை, கிழக்காசிய நாடுகளானது, அண்ணளவாக, வருடாந்தம் ஐ.அ.டொ. 5 பில்லியன்களை நேரடி வெளிநாட்டு முதலீடுகளாக கவர்ந்துள்ளன.- (மொ.உ. உ. 5 சதவீதம்)*

மொ.உ.உ வளர்ச்சி இலக்கான 8 சதவீதம் அல்லது அதிலும் அதிகமாக எல்லையை அடைய வேண்டுமாயின், இலங்கையானது தனது தற்பொழுதைய வருடாந்த முதலீட்டு வீதமான மொ.உ.உ 26 மூ சதவீதத்திலிருந்து ஆகக் குறைந்தது 35 மூ சதவீதமாக அதிகரித்தல் வேண்டும். மொ.உ.உ இன் சுமார் 6 சதவீதம் வரை அரச முதலீடுகளை உச்சப்படுத்திக் கொள்ளும் நோக்கில் அதனை முழுமையாக தனியார் முதலீடுகளின் ஊடாக அதிகரித்தல் வேண்டும். இந்த வரையறைக்குள் வெளிநாட்டு தனியார் முதலீடுகள் மிக முக்கியமான பாத்திரத்தை வகிக்கின்றன.

அனேகமான அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளைப் போன்று நேரடி வெளிநாட்டு முதலீட்டுகளை ஊக்கப்படுத்தும் பொருட்டு இலங்கையானது நியாயமான வரி விடுகைக் காலம் மற்றும் ஏனைய வரியுடன் தொடர்புடைய ஊக்கப்படுத்தல்கள் மற்றும் வரிவிடுதெ-ாகைகளை வழங்கியுள்ளதுடன் தொடர்ந்து வழங்கியும் வருகின்றது. ஆனால், இந்த முறைமைகள் பரந்த அளவில் ஏற்றுக் கொள்ளபட்ட போதும் நாட்டின் வரி வருமானத்தை கனிசமான அளவு விழுங்கியும் விடுகின்றன.

அரசிறை அழுத்தங்களானது தற்பொழுது இலங்கையில் அதிகரித்து வருகின்றன - அரசாங்கமானது வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை விரிவடைவதனை கட்டுப்படுத்துவதில் மிக கவனமாகச் செயற்படுவதுடன் அதனை 6.2 மூ சதவீதமாக பேணி வருகின்றது. மொ.உ.உ இன் சதவீதமாக வரி வருமானமானவு 1995 ஆம் ஆண்டுக்கு முன்னர் காணப்பட்ட 19 மூ சதவீதத்திலிருந்து அண்மை ஆண்டுகளில் ( 2010 - 2011 ) 13 - 15 மூ சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. அதே வேளை, நாட்டின் புதிய கீழ் நடுத்தர வருமான பொருளாதார நிலைமையின் காரணமாக சலுகை அடிப்படையிலான வெளிநாட்டு உதவிகள் தொடர்ச்சியாகவும் நிலையாகவும் குறைந்து கொண்டு வருகின்றன. இதன் மூலம் வெளிப்படுவது, இலங்கையின் அபிவிருத்தித் தேவைகளுக்கான நிதியளிப்புக்களுக்கு உள்நாட்டு வருமானங்களை நாட வேண்டிய தேவை காணப்படுகின்றது. அதாவது வரி வருமானத்தை அதிகரிக்க வேண்டிய தேவை காணப்படுகின்றது. வரி விடுதொகை மற்றும் வரி விடு முறைகளை வழங்குதல் போன்ற விடயங்களினால் அரச வருமானக் குறைவு ஏற்படுகின்றமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளமை ஒரு முக்கியமான விடயமாக இருப்பதுடன் இவ்வாறு வழங்கப்படும் சலுகைகள் அரசாங்கத்தின் எதிர்பார்த்த இலக்குகளான வெளிநாட்டு முதலீடுகளை மிகச் சிறப்பாகவும் கவர்ச்சிகரமாகவும் அடைந்து கொள்வதற்கு துணை புரிந்துள்ளன.

எவ்வாறாயினும், இந்த யுத்தத்தின் பின்னரான கட்டத்தில், உலக தரத்திலான வெளிநாட்டு தொழில்முயற்சிகளை கவர்ந்து கொள்வதற்கு புதியதொரு வாய்ப்பினை இலங்கை வெற்றி கொண்டுள்ளதுடன் இந்த வெளிநாட்டு நேரடி முதலீட்டு தளமாக இலங்கையின் கவர்ச்சித் தன்மையினை தொடர்ந்து பேணிக் கொள்ள வேண்டிய தேவை காணப்படுகின்றது. இலங்கை மக்களுக்கு அதிகமான மற்றும் சிறந்த தொழில் வாய்ப்புக்களை வழங்குவதற்கும், பூகோள பொருளாதாரத்துடன் ஒருங்கிணைந்து இலங்கைக்கு உதவி புரியும் பொருட்டு உயர் பொருளாதார வளர்ச்சியை உருவாக்குவதற்கு, உயர் முதலீட்டு வீதத்தைப் பேணும் பொருட்டும் இந்த செயற்பாடுகள் மிக முக்கியமாகும். அதன் ஊடாக இலங்கை மக்களின் வாழ்வாதார நிலைமைகளை உயர்வடையச் செய்ய முடியும். இலங்கையானது ஏனைய வெளிநாட்டு நேரடி முதலீட்டு நாடுகளான தென் மற்றும் தென் கிழக்கு ஆசிய பிராந்தியம், விசேடமாக மலேசியா, தாய்லாந்து, இந்தோனேசியா மற்றும் வியட்நாம், கம்போடியா, மியன்மார் மற்றும் லாஓ பிடிஆர் (டுயழ ீனுசு) நாடுகளுடன் தொடர்ச்சியாக போட்டியிடுகின்றது

*ஆகவே, வெளிநாட்டு நேரடி முதலீடுகளை கவரும் முகமாக போட்டித் தன்மையான வரிச் சலுகைகளை வழங்கல் மற்றும் உள்நாட்டு வருமானத்தை பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு ஆகக் குறைந்த வரி வருமானத்தைப் பேணல் ஆகிய இந்த இரண்டு விடயங்களுக்கிடையில் ஒரு சமநிலையான தன்மையினைப் பேணுவது தொடர்பான முக்கியமான நடுத்தர கால சாவாலினை எமது நாடு முகங்கொடுத்து வருகின்றது.*

வரி மதிப்பீட்டாளர்கள், திறைசேரி அலுவலர்கள் மற்றும் முதலீட்டு மேம்பாட்டு அலுவலர்கள் மத்தியில் வெளிநாட்டு நேரடி முதலீட்டை கவர்ந்து கொள்வதில் வரி ஊக்குவிப்புக்களின் வினைத்திறன் பற்றி பரந்த அளவில் விவாதிக்கப்பட்டுள்ளன. முதலீடுகளை கவர்வதற்காக வரிச் சலுகைகளை வழங்குவது தேவையற்றது மாறாக முதலீட்டு நிலைமையை மேம்படுத்துகின்ற சூழ்நிலைகள் மிக முக்கியமானது என முதலீட்டாளர்கள் பொதுவாக கருதுவதாக சில வரி வல்லுனர்கள் விவாதிக்கின்றார்கள்.

அவர்களுடைய வாதத்தில் வினைத்திறனின்மை தொடர்பாக நிறுபிப்பதற்கு போதியளவான சான்றுகள் இல்லாத சந்தர்பத்தில், வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு அவர்களுடைய கோரிக்கைகளை அதிகரித்துக் கொள்ளும் பொருட்டு நாடுகளினால் பரவலாக பயன்படுத்துகின்ற மிக முக்கியமானதொரு கொள்கை ரீதியான கருவியாக தற்பொழுதும் வரிச் சலுகைகள் காணப்படுகின்றன.

அனேகமான நாடுகளில் முதலீடு தொடர்பான உயர் தர நிறுவனங்கள் மட்டத்திலான தரவுத் தொகுதியொன்று இல்லாத காரணத்தினால் வரிச் சலுகைகளின் வினைத்திறன்களை அளவீடு செய்வதில் உள்ள சிக்கல்களை அடிக்கடி வரி நிருவகிக்ப்பாளர்கள் மற்றும் ஆய்வாளர்கள் வெளிப்படுத்தியுள்ளார்கள். இலங்கை இவற்றிலிருந்து மாறுபட்டதன்று. அத்தோடு இந்தக் கட்டுறையும் அதே சவால்களினால் தடைப்பட்டுள்ளது. வரிச் சலுகைகளின் கிரயம் மற்றும் அதன் மூலம் கிடைக்கின்ற நன்மைகளை மதிப்பீடு செய்வது இலகுவன்று மாறாக அவை, விவாதத்திற்கு உட்பட்டதுடன் இந்த ஆய்வுக் கட்டுறையில் விரிவாக அங்கிகரிக்கப்பட்டுள்ளது. அதேவேளை, 2009 ஆண்டில் வரிவிதிப்பு தொடர்பான சனாதிபதி ஆணைக்குழுவின் பிரகடணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு விடயமாக இது காணப்படுகின்றது. அத்தோடு இந்த ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையில் கிரய நன்மை தொடர்பான கண்ணோட்டமொன்றை வழங்குவதிலிருந்து இவ் ஆணைக்குழு தவிர்ந்து செயற்பட்டுள்ளமை நன்கு புலப்பட்டுள்ள விடயமாகும். எனினும், 2010 ஆம் ஆண்டுக்கான வரிச் சலுகைகளின் காரணமாக வருமானமானது மொ.உ.உ இன் 6.6 பில்லியன்களாக அல்லது வரி வருமானத்தின் 0.9 மூ சதவீத்திற்கு அண்மித்ததாக இருக்க கூடும் என மேலெழுந்தவாறான மதிப்பீடுகள் கருதுகின்றன. 2011 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் அறிமுகம் செய்த வரி வீதங்களின் கனிசமான

குறைப்பினைத் தொடர்ந்து 2011 ஆம் ஆண்டு தொடக்கம் இந்தத் தொகையானது குறைவாகக் காணப்படுகின்றன.

யுத்தம் நடைபெற்ற காலங்களில் மிக மோசமான முதலீட்டு நிலைமை காணப்பட்டமையின் காரணமாக கடந்த காலத்தில் சலுகை அடிப்படையிலான முதலீட்டு ஊக்குவிப்புக்களை வழங்க வேண்டிய கட்டாயம் இலங்கைக்கு ஏற்பட்டது என சிலர் விவாதிக்கலாம். மாறாக தற்பொழுது யுத்தம் முடிவடைந்துள்ளது, நாங்கள் சலுகை அடிப்படையிலான ஊக்கப்படுத்தல்களிலிருந்து விலகி செயற்பட முடியும். எவ்வாறாயினும், முதலீட்டாளர்கள் முதலீடுகளை மேற்கொள்வதற்கு செல்வாக்குச் செலுத்துகின்ற ஒரே காரணியாக நாட்டின் பாதுகாப்புச் சூழல் மாத்திரம் காணப்படுவதில்லை.

ஏனைய காரணிகள் அதாவது வர்த்தகக் கொள்கை கட்டுப்பாட்டு முறைமை, சர்வதேச சந்தைகளுக்கு நுழைவதற்கான சுதந்திரம், முதலீட்டுச் சூழல் கட்டுப்பாடுகள், மற்றும் நிறுவன மற்றும் நல்லாட்சி அமைப்புக்கள் போன்றனவும் மிக முக்கியமானவை என இந்தக் கட்டுறையானது விவாதிக்கின்றது.

வெளிநாட்டு நேரடி முதலீடுகளை பெற்றுக் கொள்வதற்காக வரிச் சலுகைகளை வழங்குவதிலிருந்து இலங்கையானது முழுமையாக விலகிச் செயற்படவில்லை என்பது இதன் ஊடாக தெளிவாகின்றது. இந்த முக்கியமான கட்டத்தில், வெளிநாட்டு நேரடி முதலீடுகளை கவர்வதற்கு காணப்படுகின்ற சகல உபாயங்களையும் தற்பொழுது இலங்கை முன்னெடுத்து வருகின்றது. ஆனால், போட்டி நாடுகள் தற்பொழுதும் கூட நியாயமான அளவு வரிச் சலுகைகளை வழங்கி வருகின்றமை கண் கூடு. எனினும், அனேகமான நாடுகள் தற்பொழுது கண் மூடித்தனமான வரிச் சலுகைகளை வழங்குவதிலிருந்து விடுபடுவதற்கு ஆரம்பித்துள்ளதுடன் இந்த ஆய்வுக் கட்டுறையில் கூறப்பட்ட மிக முக்கிய கருவிகள் தொடர்பாக இலக்கு வைத்துள்ளன. முதலீட்டு வரி விடுவிப்புக்கள், குறைந்த முதலீட்டு வரையறைகள் மற்றும் புதுப்பிக்கத்தகு சான்றிதழ் திட்டங்கள் போன்ற அதிகரிக்கப்பட்ட பொறுமானத் தேய்வு. போன்ற ஏனைய முறைமைகளை பின்வரும் நாடுகள் முன்னெடுக்கின்றன. அவையாவன: உதாரணமாக, உயர் தொழில்நுட்பத் துறைகளில் முதலீடு செய்வதற்கான முதலீட்டு வரிச் சலுகைகளை மலேசியா மற்றும் பிரேசில் பயன்படுத்துகின்றன. "கடினமான விடயப் பரப்புக்களில்" முதலீடு செய்வதற்காக அதிகரிக்கப்பட்ட பெறுமானத் தேய்வு கொடுப்பனவுகளை வியட்னாம் பயன்படுத்து-கின்றது: தகவல் தொழில்நுட்பத் துறையில் முதலீடு செய்வதற்காக" குறைந்த அளவான முதலீட்டு கட்டுப்பாடுகளை" பிரேசில் அறிமுகம் செய்கின்றது மற்றும் சிறந்த உறுதிப்பாட்டை உறுதிப்படுத்துவதற்கு சான்றுப்படுத்தல் திட்டமொன்றை அறிமுகம் செய்வதற்கு தாய்லாந்து திட்டமிட்டுக் கொண்டிருக்கின்றது.

மிக மோசமான தரவு வரையறைகளின் காரணமாக, இலங்கையில் முதலீட்டினை மேம்படுத்தல் மற்றும் வளர்ச்சியை அதிகரித்தல் தொடர்பில் வரிச் சலுகைகளின் வினைத்திறன் பற்றிய முழுமையானதொரு பொருளாதார ரீதியான ஆய்வொன்றை இந்த ஆய்வுக் கட்டுறை மேற்கொள்ளவில்லை. மாறாக, முதலீட்டு மேம்படுத்தலில் வரிச் சலுகைகளின் பயன்பாடு, நடைமுறையில் காணப்படும் கருவிகளின் மீளாய்வு, மற்றும் நாட்டுக்கான முன்னோக்கிய செயற்பாட்டிற்காக ஒரு நிகழ்ச்சி நிரலை கையளித்தல் தொடர்பான முக்கியமானதொரு மீளாய்வினையே இக் கட்டுறை வழங்குகின்றது. இந்தப் பிரச்சினை தொடர்பான மேலதிக ஆய்வு மற்றும் கொள்கை பகுப்பாய்வுக்கான ஒரு ஆய்வு உசாவுகை நோக்காகவும் அதன் குறிக்கோள்கள் தொடர்பில் சர்வதேச ஆய்வுக் கட்டுறையொன்று தொடர்பாக ஆழமான கவனம் செலுத்தப்படுகின்றது.

ஒரு நாட்டின் வெளிநாட்டு முதலீட்டை கவர்ந்திழுக்கின்ற தீர்க்கமாதொரு காரணியாக வரிச் சலுகைகளை இந்த ஆய்வுக் கட்டுறை ஏற்றுக் கொள்ளாததுடன், இந்த வரிச் சலுகைகளானது வரிவிதிப்பு தொடர்பான சமத்துவ கோட்பாடுகளை மீறுகின்றன என்பது ஒரு விடயமாகும், வினைத்திறனான வரிச் சலுகைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குகின்ற

சான்றுகள் விவாதத்திற்கு உட்படுத்தக் கூடியதும், மற்றும் இவை நாட்டின் வருமானத்தை குறைக்கின்ற கருவியாகவும் மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடுகளை சிறந்த தரத்துடன் கவர்ந்து கொள்வதில் போட்டியாளர்களுடன் தொடர்ந்தும் சந்தையில் இருப்பதற்கு சில சிறந்த வரிச் சலுகை முறைகளை பேணுவதற்கான தேவையினை இலங்கை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இருந்த போதும். இந்த ஆய்வுக் கட்டுறையின் பிரதான விவாதமாக இருப்பது யாதெனில், இந்த வரிச் சலுகைகள் கவர்ச்சிகரமாகவும் கிரயச் சிக்கனமாகவும் அமையும் விதத்தில் வடிவமைக்கப்பட்டு, அமுல்படுத்தப்பட்டு மேற்பார்வை செய்யப்படுதல் வேண்டும். அதன் ஊடாக வருமானம் தொடர்பான பாதக தாக்கங்கள் இழிவுபடுத்தப்படுவதுடன் பொருளாதாரக் குறிக்கோள்களையும் அடைந்து கொள்ள முடியும்.